# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**18.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில செய்திகள்

### 1. கல்வியை பொதுப்பட்டியலுக்கு மாற்றியதை எதிர்த்து வழக்கு

- கல்வியை பொதுப்பட்டியலுக்கு மாற்றியது தொடர்பான அரசியல் சட்டத்தின் **42வது திருத்தத்தை** எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆயிரம் விளக்கு தொகுதி **திமுக எம்எல்ஏ டாக்டர் எழிலனின் 'அறம் செய்ய விரும்பு'** என்ற தொண்டு நிறுவனம் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- அந்த மனுவில் **1975 முதல் 1977ஆம்** ஆண்டுகளில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போது மாநில அரசுகளின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு **வனம், நிர்வாகம், கல்வி, நீதி நிர்வாகம்** உள்ளிட்டவை பொது பட்டியலுக்கு மாற்றப்பட்டன.
- மாநில அரசு பட்டியலில் இருந்த கல்வியை பொதுப்பட்டியலுக்கு மாற்றி அரசியல் சாசனத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது கூட்டாட்சி கட்டமைப்புக்கு விரோதமானது.
- கல்வி தொடர்பாக சட்டங்கள் இயற்றும் மாநில அரசின் அதிகாரம் பறிக்கப்பட்டு, மாநில சட்டங்கள் மத்திய அரசின் சட்டங்களுக்கு கட்டுப்பட்டவையாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டு இருந்தது.
- **நவம்பர் 7ஆம் தேதிக்கு விசாரணையை** ஒத்திவைத்தனர்.

## மத்திய செய்திகள்

### 1. பிரதமர் விவசாயிகள் நிதி உதவி திட்டம்

- **ஆண்டுக்கு ரூபாய் 6000 நிதி:**
  - தகுதியுள்ள விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கும் **பிரதம மந்திரி விவசாயிகள் நிதியுதவி திட்டம்** கடந்த **2019** ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டது.
  - விவசாயிகளுக்கு நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை **ரூபாய் 2000 வீதம்** ஆண்டுக்கு **ரூபாய் 6000** நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.
  - இந்தப் பணம் சம்பந்தப்பட்ட விவசாயியின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.
  - இந்த நிலையில் இத்திட்டத்தின் **12 வது தவணைத்தொகை** விடுவிக்கும் நிகழ்ச்சி டெல்லியில் பிரதமர் விவசாயிகள் கௌரவ மாநாட்டில் நடைபெற்றது.
- **ரூபாய் 16 ஆயிரம் கோடி விடுவிப்பு:**
  - பிரதமர் மோடி இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.
  - அவர் 11 கோடிக்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு 12வது தவணை நிதி உதவியை விடுவித்தார்.
  - மொத்தம் **16 ஆயிரம் கோடி** நிதியை அவர் விடுவித்தார்.

2. 'இஸ்ரோ'வில் முதல் முறையாக யானையின் எடையில் ராக்கெட்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இஸ்ரோ இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த **'நெட்வொர்க் அக்சஸ் அசோசியேட்ஸ் லிமிடெட்'** (ஒன்வெப்) என்ற நிறுவனத்திற்கு சொந்தமான 36 பிராட்பேண்ட் தகவல் தொடர்பு செயற்கைக்கோள்களை பூமியின் குறைந்த சுற்றுப்பாதையில் ஏவுகிறது.
- அதற்காக இங்கிலாந்து நிறுவனத்துடன் **'நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட்'** (என்.எஸ்.ஐ.எல்) என்ற விண்வெளி ஏஜென்சியின் வணிகப்பிரிவு மற்றும் விண்வெளி துறையின் கீழ் உள்ள மத்திய பொதுத்துறை நிறுவனமான சி.பி.எஸ்.இ ஆகியவை ஒப்பந்தம் செய்துள்ளன.
- இதற்காக இஸ்ரோ வரலாற்றில் இல்லாத வகையில் முதல் முறையாக 6 டன் அதாவது சராசரியாக ஒரு இந்திய யானையின் எடையில் மிகப்பெரிய ராக்கெட்டான எல்.வி.எம் 3 என்ற ராக்கெட்டை வடிவமைத்து உள்ளது.
- இதன் முந்தைய பெயர் **ஜி.எஸ்.எல்.வி மார்க்-3** ஆகும்.
- **எல்.வி.எம்.3 ராக்கெட்**:
  - இஸ்ரோவை பொறுத்தவரையில் எல்.வி.எம்.3 ராக்கெட்டை பயன்படுத்தி விண்ணில் மேற்கொள்ளப்படும் முதல் வணிக ஏவல் இதுவாகும்.
  - வருகிற அக்டோபர் 23ஆம் தேதி **நள்ளிரவு 12.07** மணிக்கு ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து செயற்கைக்கோள்கள் விண்ணில் ஏவப்படுகின்றன.
  - குறைந்தபட்ச தூரத்துக்கு எல்.வி.எம்.3 என்ற வகை ராக்கெட் களை பயன்படுத்தி புவிசார் சுற்றுப் பாதையில் சேர்க்கை கோள்களை ஏவுகிறது.
  - தற்போது மூன்று நிலைகளைக் கொண்டு எல்.வி.எம்.3 ராக்கெட்டில் **கிரையோஜெனிக் நிலை, திரவ எரிபொருளால் இயங்கும் மைய நிலை** மற்றும் இந்த திட மோட்டார்கள் கொண்ட இரண்டு நிலைகள் கொண்ட ராக்கெட்டில் செயற்கை கோள்கள் பொருத்தப்பட்டு ஏவப்படுகின்றன.

3. பிரபல மருத்துவர் மஹாலனோபிஸ் காலமானார்

- **உப்பு சர்க்கரை கரைசலின் தந்தை** என புகழ் பெற்றவர்.
- **ஓ.ஆர்.எஸ்** என பரவலாக அறியப்படும் உப்பு சர்க்கரை கரைசலை கண்டறிந்ததில் முக்கிய பங்கு வகித்த மருத்துவர் **திலீப் மஹாலனோபிஸ்** உடல்நலக் குறைவால் கொல்கத்தாவில் காலமானார்.
- காலரா உள்ளிட்ட நோய்களால் வயிற்றுப்போக்கு அதிகரிக்கும் போது உடலில் அதிகப்படியான நீரிழப்பு ஏற்படும் அதன் காரணமாக நோயாளிகள் உயிரிழப்பதற்கும் வாய்ப்புள்ளது.
- காலரா பரவலின் போது அதிக அளவில் நோயாளிகளின் உயிர் இழப்புக்கும் இதுவே காரணமாக அமைந்தது.

- அதை தடுப்பதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டார் **திலீப் மஹாலனோபிஸ், ஜான்ஸ் ஹாப்கின்ஸ்** மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்.
- அவர் உப்பு சர்க்கரை கரைசலை கண்டறிந்தார். **1971 ஆம் ஆண்டு வங்கதேச போர்** காலகட்டத்தில் பலர் காலரா நோயால் பாதிக்கப்பட்ட போது உப்பு சர்க்கரை கரைசலை வழங்கி பலரின் உயிரை காப்பாற்றினார்.
- திலீப் மஹாலனோபிஸ் அதற்காக பல நாடுகளின் விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.
- **காலச்சக்கரம்:**
  - **1959 - கொல்கத்தா மருத்துவ கல்லூரி கல்லூரியில் பட்டம் பெற்றார்.**
  - **1960கள் - லண்டனில் உள்ள ராணி எலிசபெத் சிறார் மருத்துவமனையில் பயிற்சி பெற்றார்.**
  - **1966 - உப்பு சர்க்கரை கரைசல் ஆராய்ச்சியை தொடக்கினார்.**
  - **1971 - வங்கதேச போர் என்பது உப்பு சர்க்கரை கரைசலை நோயாளிகளுக்கு வழங்கி பரிசோதித்தார்.**
  - **2002 - கொலம்பியா கார்னல் பல்கலைக்கழகத்தால் 'போ லின் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.**
  - **2006 - தாய்லாந்து அரசின் உயரிய விருதான 'பிரின்ஸ் மஹிடோல்' விருதைப் பெற்றார்.**
- உப்பு சர்க்கரை கரைசல் உடலில் ஏற்படும் அதிகப்படியான நீர் இழப்பை தடுப்பதற்கான மருந்து.
- **சோடியம் குளோரைடு, பொட்டாசியம் குளோரைடு, சோடியம் சிட்ரேட் உப்புகளைக்** கொண்டு கரைசல் தயாரிக்கப்படுகிறது. காலரா, டயேரியா உள்ளிட்ட நோய்களால் வயிற்றுப்போக்கு ஏற்படும்போது இக்கரைசல் பயன்படுத்தப்படுகிறது.
- வெயில் காலங்களில் உடலில் அதிகமாக நீரிழப்பு ஏற்படுவதை தடுக்கவும் இக்கரைசல் பயன்படுத்தப்படுகிறது.
- தூள் வடிவிலும், ஜூஸ் வடிவிலும் உப்பு சர்க்கரை கரைசல் மருந்து கடைகளில் கிடைக்கிறது.
- **சிறுநீரக பாதிப்பு உள்ளோர், நீரழிவு நோயால் பாதிக்க பட்டோர், இதயம் சார்ந்த நோயால் பாதிக்கப்பட்டவர்** உள்ளிட்டோர் உப்பு சர்க்கரை கரைசலை தவிர்க்க வேண்டும்.

## 4. உஜ்வலா திட்ட பயனாளிகளுக்கு ஆண்டுக்கு இரண்டு இலவச எரிவாயு சிலிண்டர்கள்

- குஜராத் மாநிலத்தில் மத்திய அரசின் உஜ்வலா திட்டப்பணி பயனாளிகளுக்கு ஆண்டுக்கு இரண்டு இலவச எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படும் என்று **தீபாவளி பண்டிகையை** முன்னிட்டு குஜராத் மாநில அரசு அறிவிப்பு வெளியிட்டது.
- மேலும் வாகனங்களில் பயன்படுத்தப்படும் இயற்கை எரிவாயு **(சிஎன்ஜி)**

மற்றும் வீடுகளில் சமையலுக்கு குழாய் மூலமாக விநியோகிக்கப்படும் **(பிஎன்ஜி)** இயற்கை எரிவாயு மீதான மதிப்பு கூட்டு வரி ( வாட்) **10 சதவீத** அளவுக்கு குறைக்கப்படும் என்று மாநில அரசு அறிவித்தது.

### 5. இந்தியாவில் 41 கோடி பேர் ஏழ்மையிலிருந்து விடுபட்டனர்

- பன்முக ஏழ்மை குறியீட்டை **ஐ.நா. வளர்ச்சி திட்டம் ( யுஎன்டிபி) ஆக்ஸ்போர்டு** பல்கலைக்கழகத்துடன் இணைந்து வெளியிட்டது.
- நடப்பாண்டுக்கான அறிக்கை வெளியிடப்பட்டது.
- இந்தியாவில் கடந்த 2005-06 முதல் 2019-21 வரையிலான காலகட்டத்தில் சுமார் **41.5 கோடி பேர்** ஏழ்மை நிலையில் இருந்து விடுபட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- **15 ஆண்டுகளில்** இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான நபர்கள் ஏழ்மை நிலையில் இருந்து விடுபட்டுள்ளது வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றம் என ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.
- 2005-06 முதல் 2015-16 வரையிலான காலகட்டத்தில் சுமார் 27.5 கோடி பேரும், 2015-16 முதல் 2019-2021 வரையிலான காலகட்டத்தில் சுமார் 14 கோடி பேரும் ஏழ்மை நிலையில் இருந்து விடுபட்டனர்.
- **2030** ஆம் ஆண்டுக்குள் உலகில் உள்ள ஏழை மக்களின் எண்ணிக்கையை குறைந்த பட்சம் பாதி அளவு குறைக்க வேண்டும் என்ற நீடித்த வளர்ச்சிக்கான இலக்கை எளிதில் எட்டி விட முடியும் என ஐ.நா. நம்பிக்கை தெரிவித்துள்ளது.
- சர்வதேச அளவில் **111 நாடுகளில் சமமாக 120 கோடி பேர்** ஏழ்மை நிலையில் உள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அவர்களில் சுமார் **59.3 கோடி பேர் 18 வயதுக்கு குறைவான சிறார்கள்** என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
- உலகிலேயே இந்தியாவில் தான் அதிக எண்ணிக்கையிலான ஏழைகள் 22.89 கோடி உள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அவர்களில் 9.7 கோடி பேர் சிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அதற்கு அடுத்து நைஜீரியாவில் 9.67 கோடி ஏழைகள் உள்ளனர்.
- **பிகார், ஜார்கண்ட், உத்தர பிரதேசம்** ஆகிய மாநிலங்களில் ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 6. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக டி.ஒய்.சந்திர சூட் நியமனம்

- உச்சநீதிமன்றத்தின் **ஐம்பதாவது தலைமை நீதிபதியாக** டி.ஒய்.சந்திர சூட் நியமிக்கப்பட்டார்.
- அரசமைப்புச் சட்டம் அளித்துள்ள அதிகாரத்தின் அடிப்படையில் குடியரசு தலைவர் திரௌபதி முர்மு உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக டி.ஒய்.சந்திர சூட்டை நியமித்துள்ளார்.

- நவம்பர் ஒன்பதாம் தேதி சந்திர சூட் பதவி ஏற்பார் என்று தெரிவித்தார்.
- உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய தலைமை நீதிபதி எட்டாம் தேதி ஓய்வு பெற உள்ளார்.
- அவர் தலைமை நீதிபதியாக **74 நாட்கள்** மட்டுமே பதவி வகிக்க உள்ள நிலையில் டி.ஒய்.சந்திர சூட் தலைமை நீதிபதியாக இரண்டு ஆண்டுகள் பதவி வகிப்பார்.
- **2024 ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம்** தேதி சந்திர சூட் ஓய்வு பெறுவார்.

## 7. விவசாயிகள் வள மையம் திறப்பு

- மத்திய அரசின் **'ஒரே நாடு, ஒரே உரம்'** என்ற திட்டத்தின் கீழ் அனைத்து மானிய உரங்களும் **'பாரத்'** என்ற ஒரே பெயரில் விற்பனை செய்யப்பட உள்ளது. அதனை பிரதமர் மோடி அறிமுகப்படுத்தினார்.
- இனி நாடு முழுவதும் 'பாரத்' என்ற ஒரே பெயரில், ஒரே தரத்துடன் உரம் விற்பனை செய்யப்படும்.
- இது உர நிறுவனங்களுக்கு இடையிலான போட்டியை குறைக்கும். அத்துடன் நாடு முழுவதும் போதிய அளவில் உரங்கள் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்யும் என்றார்.
- **விவசாயிகள் வள மையம் திறப்பு:**
    - **'பிரதமரின் விவசாயிகள் வள மையங்கள்'** திறக்கப்பட்டன. மொத்தம் **600 மையங்களை** பிரதமர் மோடி திறந்து வைத்தார்.
    - பிரதமரின் விவசாயிகள் வள மையங்கள் பல்வேறு சேவைகளை விவசாயிகளுக்கு வழங்கும்.
    - இந்த மையங்கள் விதைகள், உரங்கள் உள்ளிட்டவற்றை விநியோகிக்கும் மையமாக மட்டுமின்றி மண் வளம், விதைகள் மற்றும் உரங்களை பரிசோதிக்கும் மையமாகவும் இருக்கும். அத்துடன் அரசு திட்டங்கள் குறித்த தகவலையும் இந்த மையங்களில் பெறலாம்.
    - மேலும் நாட்டில் உள்ள சுமார் **3.30 லட்சம்** சில்லறை விற்பனை கடைகள் பிரதமரின் விவசாயிகள் வள மையங்களாக மாற்றப்படும்.
    - விவசாயிகளுக்கு குறைந்த விலையில் உரங்கள் கிடைப்பதற்கு சர்வதேச சந்தையில் ஒரு கிலோ யூரியாவை **ரூபாய் 75 முதல் ரூபாய் 80** க்கு வாங்கும் மத்திய அரசு, அதனை **கிலோ ரூபாய் ஐந்து முதல் ரூபாய் ஆறு** என்ற விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறது.